## எண்ணெய் வித்துக்களுக்கான விலை முன்னறிவிப்பு

**நிலக்கடலை**

வேளாண் மற்றும் உழவர் நல அமைச்சகத்தின் படி, இந்தியாவில் 2019-20—ஆம் ஆண்டு, நிலக்கடலை 48.25 இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு 99.52 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இது கடந்த வருடத்தை காட்டிலும் பரப்பளவில் 1.96 சதவீதமும், உற்பத்தியில் 32 சதவீதமும் அதிகமாகும். குஜராத், ஆந்திரா, ராஜஸ்தான், கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிரா ஆகியவை முக்கிய நிலக்கடலை பயிரிடும் மாநிலங்களாகும். 80 சதவீத நிலக்கடலை கரிஃப் பருவத்தில் பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டில் கரிஃப், ரபி மற்றும் நீர் ஆதாரம் உள்ள இடங்களில் கோடை பயிராகவும் பயிரிடப்படுகிறது. தமிழகத்தில் 2019-20 —ஆம் ஆண்டு சராசரியாக எக்டருக்கு 2.98 டன்கள் உற்பத்தி திறனுடன் 3.46 இலட்சம் எக்டர் பரப்பளவில் 4.85 இலட்சம் டன்கள் நிலக்கடலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், நாமக்கல், கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் தர்மபுரி ஆகியவை நிலக்கடலை பயிரிடப்படும் முக்கிய மாவட்டங்களாகும்

இச்சூழலில், விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டம், கடந்த 21 ஆண்டுகளாக திண்டிவனம் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிய நிலக்கடலை விலை மற்றும் சந்தை ஆய்வுகள் மேற்கொண்டது. ஆய்வுகளின் சந்தை மற்றும் விலை அடிப்படையில், டிசம்பர் 2021 முதல் ஜனவரி 2022 தரமான நிலக்கடலை பண்ணை விலை கிலோவிற்கு ரூ. 60 முதல் ரூ. 65 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

## எள்

உலகளவில் எள் உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியா இரண்டாவதாக உள்ளது. பெரும்பாலும் வெள்ளை மற்றும் கருப்பு எள் வகைகள் பயிரிடப்பட்டலும், சில பகுதிகளில் சிவப்பு மற்றும் இளஞ் சிவப்பு எள் வகைகளும் பயிரிடப்படுகின்றன. வேளாண் மற்றும் உழவர் நல அமைச்சகம், 2019-20 ஆம் ஆண்டில் இந்தியாவில் எள் 6.57 இலட்சம் டன்கள் எள் 16.22 இலட்சம் எக்டர் பரப்பளவில் உற்பத்தியானதாக தெரிவித்துள்ளது.

மத்தியப்பிரதேசம், உத்திரப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், ராஜஸ்தான், குஜராத், மகாராஷ்டிரா, ஒடிசா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு உள்ளிட்ட நாட்டின் மத்திய மற்றும் தென் பகுதிகளில் பெருவாரியாக கஃரிப் பருவத்தில் எள் பயிரிடப்படுகிறது. தமிழகத்தில் குறைந்த பரப்பளவில் கோடை பயிராக நீர் ஆதாரம் உள்ள இடங்களில் எள் பயிரிடப்படுகிறது. 2019-20 ஆம் ஆண்டில் தமிழகத்தில் எக்டருக்கு 0.688 டன்கள் உற்பத்தி திறனுடன் 53010 எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 36470 டன் எள் உற்பத்தி செய்யப்பட்டது. ஈரோடு, கரூர், சேலம், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருப்பூர், புதுக்கோட்டை மற்றும் திருவண்ணாமலை ஆகியவை 2019-20-ம் ஆண்டில் மாநில பரப்பளவில் 66 சதவீதமும் உற்பத்தியில் 32 சதவீதமும் பங்களித்த முக்கிய மாவட்டங்களாகும்

இச்சூழலில், விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் , வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டம் கடந்த 21 ஆண்டுகளாக ஈரோட்டில் உள்ள சிவகிரி ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிய எள் விலை மற்றும் சந்தை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், நல்ல தரமான எள்ளின் விலை டிசம்பர் 2021 முதல் ஜனவரி 2022 ஒரு கிலோவிற்கு ரூ.80 முதல் ரூ85 இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப் படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

*உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்*
*வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்*
*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*
*கோயம்புத்தூர்-641 003*
*தொலைபேசி -0422-2431405*

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

*பேராசிரியர் மற்றும் தலைவர்*
*எண்ணெய் வித்துக்கள் துறை*
*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*
*கோயம்புத்தூர்-641 003.*
*தொலைபேசி எண் -0422-2450812*

## Price Forecast for Oilseeds

### A. Groundnut

As per the Ministry of Agriculture and Farmers Welfare, groundnut in India was cultivated in 48.25 lakh hectare with a production of 99.52 lakh tonnes in 2019-20, which is higher by 1.96 per cent in area and 32 per cent in production compared to previous year. The major growing States are Gujarat, Andhra Pradesh, Tamil Nadu, Karnataka, Maharashtra, Rajasthan, Madhya Pradesh, Orissa, and Uttar Pradesh.

Although the crop can be grown in all the seasons, *Kharif* season accounts for about 80 percent of the total production. It is grown as *Kharif,* rabi and also as a summer crop (January-May) under assured irrigation in Tamil Nadu. In Tamil Nadu, during 2019-20, groundnut was cultivated in 3.46 lakh hectares producing 10.33 lakh tonnes with an average yield of 2.98 tonnes/ha. Major groundnut producing districts are Tiruvannamalai, Villupuram, Vellore, Kanchipuram, Thiruvallur, Cuddalore, Namakkal, Krishnagiri, Salem and Dharmapuri.

In this situation, TN-IAMP Price Forecasting Scheme implemented at the Centre for Agricultural and Rural Development Studies (CARDS), Tamil Nadu Agricultural University analyzed the past 21 year historical prices that prevailed in Tindivanam Regulated Market for groundnut. As per the results of the time series analysis and market survey, the farm gate price of good quality groundnut during December 2021-January 2022 would be around Rs.60-65 per kg. Hence, farmers are advised to take up the selling decision accordingly.

**B. Gingelly**

India is the second largest producer of gingelly in the world. White and Black of gingelly seeds are popular though few other varieties varying from red to rose are also available. As per the Ministry of Agriculture and Farmers Welfare, gingelly was cultivated in 16.22 lakh hectare with a production of 6.57 lakh tonnes in 2019-20.

Majority of gingelly is grown as *Kharif* crop under rainfed conditions in central and southern parts of the country including Madhya Pradesh, Uttar Pradesh, Andhra Pradesh, Rajasthan, Gujarat, Maharashtra, Orissa, Karnataka and Tamil Nadu. In Tamil Nadu, gingelly is cultivated in a small area as a summer crop under irrigated conditions. In Tamil Nadu, Gingelly production was around 36470 tonnes from an area of 53010 hectares with a productivity of 0.688 tonnes/ha during 2019-20. Erode, Karur, Salem, Cuddalore, Villupuram, Thanjavur, Tiruppur, Pudukottai and Tiruvannamalai are the major districts that contributed about 66 per cent of the State area and 70 per cent of the State production during 2019-20.

In this situation, TN-IAMP Price Forecasting Scheme implemented at the Centre for Agricultural and Rural Development Studies (CARDS), Tamil Nadu Agricultural University analyzed the past 21 year prices for gingelly that prevailed in Sivagiri Regulated Market of Erode district. As per the results of the time series analysis, the farm gate price of good quality gingelly of would be around Rs.80 to Rs. 85 /- kg during December 2021-January 2022. Hence, the farmers are advised to take appropriate selling decision.

***For details contact***

*Domestic and Export Market Intelligence Cell*
*Centre for Agricultural and Rural development Studies*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone No: 0422-2431405*

***For technical details, contact***

*Professor and Head*
*Department of Oil Seeds*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone No: 0422-2450812*